மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி 11 வகையான செயற்குறிப்புகள் இருக்கின்றன. அதிலே குளத்தூரை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை குளத்தூர் வட்டம் என்றும் மற்றொரு பகுதியை இலுப்பூர் வட்டம் என்றும் வைக்க செயற்குறிப்பு இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறையில் அதன் தன்மைகளைப் பொறுத்து, நிதி ஆதாரத்தைப் பொறுத்து, வேறு பல சூழ்நிலைகளைப் பொறுத்து முடிவு காண வேண்டும். இதன் விவரக் குறிப்புகள் சிறப்பு ஆணையாளரிடமிருந்து தலைமைச் செயலகத்தில் உள்ள செயலாளருக்கு வந்து வருவாய்த் துறை ஆராய்ந்து பார்த்த பிறகு முடிவு எடுக்கப்படும். இந்த ஆண்டிலேயே நடைபெறும் என்று உறுதி கூற முடியாது. என்றாலும் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அதை ஆராய்ந்துதான் செய்ய முடியும்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் முடுவார்பட்டி பிர்க்கா.

477—(*வினா எண் 12196) திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் அலங்காநல்லூர் யூனியன் முடுவார்பட்டி பிர்க்காவை மதுரை தாலுகாவுடன் இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி வட்டம் 7 குறுவட்டங்களையும் 78 கிராமங்களையும் உள்ளடக்கியது. மதுரை வடக்கு வட்டம் 12 குறுவட்டங்களையும் 182 கிராமங்களையுங் கொண்டது. முடுவார்பட்டி குறுவட்டம் 13 கிராமங்களைக் கொண்டதாக வாடிப்பட்டி வட்டத்தில் இயங்கி வருகிறது. இக் குறுவட்டத்தை மதுரை வடக்கு வட்டத்துடன் இணைத்தால், மதுரை வடக்கு வட்டம் 13 குறுவட்டங்களையும் 195 கிராமங்களையும் கொண்டதாக மாறிவிடும். இதனால் மதுரை வடக்கு வட்டத்தின் ஆட்சி வரம்பும், பரப்பளவும் மிகுதியாவதோடு மக்களுக்குக் கூடுதலாக தொல்லைகளும் ஏற்படும். மேலும் இதனால் வாடிப்பட்டி வட்டம் 6 குறுவட்டங்களையும் 65 கிராமங்களையும் கொண்டதாகவும் குறைந்துவிடும். எனவே முடுவார்பட்டி குறுவட்டத்தை வாடிப்பட்டி வட்டத்திலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை.

1987 ஏப்ரல் 24]

(முற்பகல் 10-20)

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாடிப்பட்டி தாலுக்கா உசிலம்பட்டி கோட்டத்தில் இணைவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. தற்போது அது மதுரைக் கோட்டத்தில் இணைந்துள்ளதால், அதை வலியுறுத்தவில்லை. முடுவார்பட்டி பிர்க்கா வாடிப்பட்டி வட்டத்தில் இருப்பது அந்த மக்களுக்கு மிகச் சிறப்பாக இருக்குமென்று கூறுகிறார்கள். அதோடு வாடிப்பட்டி தாலுக்கா என்று ஏற்படுத்திய பின்னாலே, அதற்குரிய நீதிமன்றங்கள், ஆஸ்பத்திரி வசதிகள் போன்றவைகள் அங்கே ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அங்கே தாலுக்கா அலுவலகம் திறக்கப்படவில்லை. இவை குறித்து சீக்கிரம் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, வாடிப்பட்டி தனி வட்டமாக தகுதி உயர்த்தப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதனைச் செம்மைபடுத்துவதற்கும், அந்த வட்டத் தலைநகரிலே நடைபெற வேண்டிய நிர்வாகப் பணிகளை சீராக, செம்மையாக நடத்த முயற்சிகளை அந்தந்தத் துறையினர் மேற்கொள்கின்றனர். அது முறைப்படி மேற்கொள்ளப்படும். இந்தக் கேள்வியைப் பொறுத்து முழு விவரம் இல்லாததால் அதைச் சொல்வதற்கில்லை. ஆனால் வட்டத் தகுதி நிலையை உயர்த்த வருவாய்த் துறையினர் தக்கபடி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைத்தல்.

(478—*வினா எண். 893)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சேலத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.